**பண்டாரவளை பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 இலும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 இலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 31 இல் சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர்த்து, பண்டாரவளை பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 252,550 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நடைமுறைச்சொத்துக்களின் கீழ் காட்டப்படவேண்டிய ரூபா 287,164 பெறுமதியான இருப்புக்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெமபர் 31 இல் உள்ளவாறான 03 வேலைகளுடன் தொடர்புடைய கடன்கொடுத்தோர்களின் பெறுமதி ரூபா 1,412,987 ஆல் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய ரூபா 112,313 தொகையான கடன்கொடுத்தோர்கள் மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவீனத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாணடிற்கான ஒப்பந்தக் கடன்கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்ட கடன்கொடுத்தோர்கள் ரூபா 55,473 ஆல் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஊ) ரூபா 37,812 தொகையான உத்தியோகத்தர்களின் பிணைவைப்புக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) இலங்கை வங்கியில் பேணப்பட்ட நிலையான வைப்புக்கள் தொடர்பான 2016 ஆம் ஆண்டிற்கான வருமதி வட்டி ரூபா 11,700 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஏ) 2016 திசெம்பர் 31 இல் உளள்வாறான உத்தரவாத மற்றும் தண்டப்பண நிலுவைகள் ரூபா 434,326 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு கட்டணங்களிற்காக ஏற்பாடு கணக்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஓ) முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் மீளாய்வாண்டிலும் திருத்தப்பட்டிருக்கவில்லை.

(i) 06 நிர்மாண வேலைகள் தொடர்பிலான வருமதிகள் கடன்பட்டோர்களாக இரண்டு தடவை கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ii) 07 நிர்மாண வேலைகள் தொடர்பிலான செலுத்த வேண்டிய கடன்கொடுத்தோர்களாக இரண்டு தடவை கணக்கிடப்பட்டிருந்தது.

(iii) இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியில் பராமரிக்கப்படுகின்ற நிலையான வைப்புக்கள் தொடர்பான வட்டி வருமதிகள் ரூபா 46,387 ஈல் குறைத்துக் காட்டியமை.

(iv) நீதிமன்ற தண்டப்பணத்திலிருந்தான வருமானம் ரூபா 157,707 ஆல் குறைத்துக் காட்டியமை

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

சுபையினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கணக்கு மீதிகளிற்கும் உரிய பட்டியல்களில் காட்டப்பட்ட நேரொத்த பெறுமதிகளிற்கும் இடையில் ரூபா 8,012,596 வித்தியாசம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 16,076,980 ஆகவிருந்த அதேநேரம் அத்திகதியிலுள்ளவாறான செலுத்த வேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 14,588,935 ஆகவிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 10,899,552 பெறுமதியான் நான்கு கணக்கு விடயங்களானது கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுக்கிடையிலான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 ஆம் மற்றும் 4 ஆம் பிரிவுகள் | சபையிலிருந்து இடமாற்றம் பெற்றுச்சென்ற மற்றும் அவர்களுடைய பதவிகளை வறிதாக்கம் செய்த 06 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 311,934 உத்தியோகத்தர் கடன்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1990 ஒக்தோபர் 10 இன் 41/90 ஆம் இலக்க பொது நிரவாகச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 07 வாகனங்களிற்கான எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்கத்தால் திருத்தப்பட்டவாறான 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரசபைச் சட்டத்தின் 23(அ) பிரிவு | சூழல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய நடவடிக்கைகள் முறையான அளவையை மேற்கொள்ளுவதன் மூலம் இனங்காணப்பட்டிருக்காததுடன் 30 வணிக நடவடிக்கைகளிற்கான சூழல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**1.3.6 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

வலுவினை பகிர்ந்தளிப்பது தொடர்பில் ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளரால் வழங்கப்பட்ட 2015 யூன் 03 ஆந் திகதிய 12/1/1 ஆம் இலக்க கடிதத்தின் 02(vii) ஆம் பந்தி மற்றும் உதவி ஆணையாளரால் வழங்கப்பட்ட 2016 ஆகஸ்ட் 13 ஆந் திகதிய பீ/ஏசீஎல்ஜீ/03/02 ஆம் இலக்க கடிதத்திற்கு முரணாக ரூபா 81,320 பெறுமதியான 856 லீற்றர் பெறுமதியான எரிபொருட்களை முறையாக பயன்படுத்துவதற்கான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

**2 நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 10,002,360 தொகையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிலிருந்து மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,431,704 ஆகவிருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

வருமான சேகரிப்பின் செயலாற்றலானது பட்டியலிடப்பட்ட ஏக்கர் வருமான சேகரிப்பின் செயலாற்றல் 36 சதவீதமாக மாத்திரம் இருந்தமையால் சேகரிப்பின் செயலாற்றலானது திருப்திகரமான மட்டத்தில் இருந்திருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

**2.2.2 ஏனைய வருமானம்**

சபையின் அதிகாரப்பிரதேசத்தினுள் ஐந்து தொலைத்தொடர்பு கோபுரங்களை பராமரிப்பது தொடர்பில் சட்டங்கள் இருந்தபோதும் அதற்கான கட்டணங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையிடமிருந்து ரூபா 5,221,457 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்களும் ரூபா 5,310,593 தொகையான முத்திரைக் கட்டணங்களும் பெறவேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறமையீன்மைகள்

சபையின் உத்தியோகத்தர்களால் பெறப்பட்ட குத்தகைக்கடன்கள் மீதான வட்டிக்கான பங்களிப்பாக உரிய வங்கிகளுக்கு சபையால் திருப்பப்பட்ட ரூபா 172,804 திரும்பல் உள்ளூராட்சித்திணைக்களத்திடமிருந்து திருப்பப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு செயற்திறமையீன்மைகள்

வெளித்தரப்பினருக்கு ஜேசீவி இயந்திரத்தை வாடகைக்கு விடுவதால் கிடைக்க வேண்டிய ரூபா 11,700 நிலுவை வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப்புப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடானது மீளாய்வாண்டிற்கான வருமான மற்றும் செலவீன முகாமைத்துவ கட்டுப்பாட்டின் வினைத்திறனான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த பெறுகைத் திட்டம்

வருடாந்த பெறுகைத் திட்டமானது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

2016 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) இருப்புக் கட்டுப்பாடு
(ஆ) வருமானச் சேகரிப்பு
(இ) வாகனங்கள் மீதான கட்டுப்பாடு
(ஈ) பெறுகைகள்